725

திவு எண் — M 572 வெள்ளிக் கிழமையில் குருகுலத தாள

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை-6 குருகுலம், மாம்பாக்கம்; செய, ஆடி. கரு 30—7—54 தளிர்-41

## சிவம்

"தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி"

(திருவாசகம்)

தென்னாடுடைய சிவன் எந்நாட்டவர்க்கும் இறைவன். அல்லது எந்நாட்டவர்க்கும் இறைவன் தென்னாடுடைய சிவன் என்பது திருவாசகத்தின் கருத்து.

இறைவன் ஒருவனே. அவ்வொருவனுக்குப் பல நாட்டு மொழிகள் அவ்வந் நாட்டின் இயற்கை நிலையை யொட்டிப் பல பெயர்கள் வழங்குகின்றன. பெயர் பலகொண்டு கடவுளர் பலர் என்னும் முடிவுக்கு வருதல் அறியாமை. 'ஒருநாமம் ஓருருவம் ஒன்றுமிலார்க்கு ஆயிரம்—திருநாமம் பாடித் தெள்ளேணங் கொட்டாமோ' என்றார் மாணிக்கவாசகனார். "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்னும் திருமூலர் மொழியும் ஈண்டு உன்னற் பாலது.

தென்னாட்டவராகிய நாம் இறைவனைச் சிவம் என்னும் செம் மொழியால் வழுத்துகின்றோம். இச் சிவம் என்னுஞ் சொல் வடமொழியிலும் வழங்குகின்றது. தென்னாட்டார் பரம்பொருளைச் செம்மை என்னும் செந்நிறமாகக் கண்டு அதனைச் சிவம், சேயெனப் போற்றி வருகின்றனர்.

வெம்மையினை அடிப்படையாகக் கொண்டது நம் நாட்டின் இயற்கை. ஆதலின், இறைவனுக்குரிய வடிவம் எத்தகையதாய் இருத்தல் வேண்டும்? 'தூயமேனிச் சுடர் விடுசோதி' 'ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெருஞ் சோதி' 'விரிசுடராய் நின்ற மெய்யன்' 'செந்தழல்போற் றிருமேனி' 'ஈறிலாக் கொழுஞ் சுடர்க்குன்றே' 'கடுந்தழற் பிழம்பன்ன மேனி' 'செக்கர் போலுந் திருமேனி திகழ நோக்கிச் சிலிர் சிலிர்த்து' என வருஉஞ் செம் மொழிகளைத் திருவாசகத்தினின்று அகழ்ந்தெடுத்து உற்று நோக்குக.

இறையின் இயற்கை வடிவம் செக்கச் செவேலெனத் திகழ்தல் நோக்கித் 'தென்னாடுடைய சிவனே போற்றி' என வழுத்தியும், அச் சிவனே ஏனைய பிற நாடுகளின் இயற்கை நிலைகளுக் கேற்ப வெவ்வேறு பெயரான் அழைக்கப் படுதலை அறிவுறுத்தப் பொதுவாக "எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி" எனவும் நம் மணிமொழிப் பெம்மான் அருளிச் செய்தார்.

இறையென்னும் உயிரை நினைப்பற நினைந்து அதனை இயற்கையினூடு கண்ட பெரியோர்கள் தங்கள் அளவில் கடவுள இன்பத்தைத் துய்த்துச் சென்றார்களில்லை. அவர்கள் அருளாளர்கள். ஆனமையினாலே 'நான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்' என்னும் கருத்தாலும் உயிர்கள் மீது கொண்ட கருணையாலும் மறை மொழிகளை உலகுக்கு உதவிச் சென்றனர்.

எனவே, நினைப்பற நினைந்து இறைவனல்லால் பிறிது மற்றின்மை கண்ட மணிவாசகனார் அருளிய திருவாசகத் தேனைச் சுவைத்து உய்வோமாக.

'மூர்த்தி'

## "முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)
6-ம் ஆண்டுக் கையொப்பம்
(23-10-53 முதல்)

| | | | | |
|---|---|---|---|---|
| உள்நாடு | ரூ. | 4 | 0 | 0 |
| வெளி நாடு | ரூ. | 6 | 0 | 0 |
| தனித் தாள் | | 0 | 1 | 0 |

ஆயுள்—

| | | | | |
|---|---|---|---|---|
| கையொப்பம் | ரூ. | 100 | 0 | 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)


"யாதும் ஊரே, யாவரும் கேளிர்;
தீதும் நன்றும் பிறர்தர வாரா."

—புறநானூறு.


| | | |
|---|---|---|
| இலை 6 | செய, ஆடி, 30-7-54 வெள்ளி. | தளிர் 41 |


## தேனீப்பு

(2-7-54)

இயற்கை அமைதியில் ஆசிரியர் தியானிக்கக் குழுமி யிருந்தோர்க்கு முன்னுரையாக சில வழங்கி யுதவியது:—

"சோதியே சுடரே" என்று இரவு வாரியாரவர்கள் பேச இருக்கின்றார்கள். அந்தச் சுடர் நம்மிடத்திலே இப்போது வளர்ந்து வருகின்றமாதிரி தோற்றுகிறது.......

நம் சாஸ்திர பரிபாஷைகளில் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் பெயர்களைக் கேட்கிறோம். அப்படி யென்றால் என்ன என்று கேட்கிறார்கள்.

சரியை உடம்பின் உழைப்பு அதிகமாக இருப்பது. கிரியை என்று சொல்வது உடம்பின் உழைப்புடன் உள்ளத்தின் உழைப்பும் மிகுதியாய்ச் சேர்தல். யோகம் என்பது உள்ளம் மட்டும் நன்கு உழைப்பது. ஞானம் என்பது இவற்றின் உழைப்பில்லாமல் உழைப்பின் நலத்தை நுகர்ந்து கொண்டு சும்மா இருப்பது; அதாவது ஓய்வாய் இருப்பது. அதுபோல நாம் பாகுபடுத்தி அமைத்துக்கொள்ள வேண்டும்.

உழைப்பில்லாமலிருந்தால் ஓய்வு என்கிறோம். அந்த ஓய்வு நிலையே அதாவது தெளிவு நிலையே ஞான நிலை.

இப்போது நாம் சும்மா இருக்கும் சுகத்துக்கு வந்திருக்கிறோம். மனம் முதலிய கரணங்கள் முற்றும் ஓய்வான சுகத்திற்கு வந்திருக்கிறோம்.

இந்த மலைச் சூழலும் மாலைக் காலமும் எவ்வளவு இன்பம் பயக்கின்றன. இவையெல்லாம் சும்மாயிருக்க வழிகோலுவன.

மக்களுக்கு உடம்பு-மனம் மாறி மாறி உழைக்கின்றன. நெறியாய் உழைத்தால் நற்பயன் விளையும். ஓய்வாகவும் இருக்கப் பெறலாம். மாமியார் வீட்டில் உழைத்தவர்கள் அம்மா வீட்டில் ஓய்வும் இன்பமும் காண விரும்புவார்கள். சிலர் அம்மா வீட்டிலும் சும்மா இருப்பதில்லை (சிரிப்பு) சக்தி அம்மா வீடு........ அருளில், அருட் சக்தியில் தலைப்பட்டால் நாம் சும்மா இருக்கலாம். அப்போது நமது புறநிலை மோனமாயிருக்கும்; அகநிலை ஞானமாயிருக்கும்.

அந் நிலையில் தாயார் வீடு, அருட்சக்தி நிலையமாகிய இயற்கைதான்! தாயின் மடி என்னும் அருளில் அமர்ந்திருப்பதும், இயற்கையில் அமர்ந்திருப்பதும் ஒன்றுதான்

அங்ஙனம் அமர்ந்திருக்கும் உணர்வு நிலையே தியானம்.

அப்படியானால், மோன ஞானியர் சோம்பேறிகளல்லர். ஓய்வின் சுகம் உழைப்பவர்கட்கே தெரியும். ஓய்வில் உண்டாகும் இன்பம் உழைத்தபின் உண்டாவது. உழைக்காதவர்கட்கு இது தெரியாது. ஆதலால் சரியை கிரியை யோகங்களால் அதாவது அகப்புறக் கருவிகரணங்களால் தவநெறியில் நன்கு உழைத்தபின்பே அதன் பயனாக சும்மா இருத்தலாகிய இந்த ஞானானந்த ஓய்வின்பத்தை மோன ஞானியர் உற்று நுகர்கின்றார்கள். சாப்பிட்டபின் சிறிது நேரம் மக்கள் ஆற அமர இருந்து இன்பம் நுகர்கிறார்கள்; அதனைச் சோம்பேறித்தனமான இன்பம் என்று சொல்லலாமா? உழைத்துத் தேடி உண்பார்க்கன்றோ அந்த ஓய்வின்பத்தின் அருமை தெரியும்!

திருக்கழுக்குன்ற விழா பல அங்கங்களை உடையது; ஒரு நாள் ஆராய்தல், ஒரு நாள் வழிபாடு ஒரு நாள் தியானம் இப்படி அமைந்திருக்கிறது. அநேகமாக விழாக்கள் பிரிவு கொண்டதல்ல. விழாக்களின் பெரும்பயன் யாத்திரையில் தெரியும் இப்போது சென்ற யாத்திரை இருநூறுபேர் கொண்டது. நம் முத்துசாமி செட்டியார் வருகிற யாத்திரைக்கு 500 பேர் தருவதாக உறுதி யளித்திருக்கிறார். பெரியவர்கள் வந்தால் நம் வாரியார் போன்றவர்கள் யாத்திரையில் கலந்து கொண்டால் 5000 பேர் வந்தமாதிரி. பெரியவர்கள், அரசியல் தலைவர்கள்-தொடர்புடைய

வர்கள்—அடிக்கடி கோயிலுக்குப் போதல் வேண்டும்....... சுவாமிகளைப் போன்றவர்கள் வந்திருக்கும்போது அவர்கள் (மந்திரிகள்) சூழஇருத்தல்வேண்டும். அருள் நாள். அருள் ஆக்கம் பொருளாக்கம் இந்த விழா—அங்கங்களால் — பெரியவர்கள் துணையால், ஆதரவால் அமைந்திருக்கிறது. யாத்திரையின் போது கஞ்சனூர் வரவேற்பு குறிப்பிடத் தக்கது. கோயில் ஞானசம்பந்தர் மடத்தைச் சேர்ந்தது. சுவாமிகளின் மேற்பார்வை; கேட்கவா வேண்டும். சிறப்பான வரவேற்பு—மாலை—பூரண கும்பம்—வழிபாடு—அங்கங்கே கூட்டங்கள். 'வேதஒலி' என்னும் பொருள் பற்றிப் பேசிய பின் அதற்குச் சிறிது காணிக்கையும் செலுத்தினர். சுவாமிகளின் ஆக்கம் அதிகப்படப்பட 500 முதல் 5000 பேர் திரளலாம். யாத்திரை உணர்ச்சிக்கு வழி. உழைப்பினைப் பெருக்காவிட்டால் ஓய்வு ஏது?

ஓய்வில் அமர்ந்திருப்பது தியானம் என்றோ மல்லவா? அது பெருக வேண்டும். நடக்கிறோம் ஓர் அடி பெயர்த்து இன்னோர் அடி வைக்கிறோம் இடையிலே நேரம் இருக்கிறது. உதடு ஒன்றினை யொன்று தொடுகின்ற போதும் இடையிலே நேரம் உண்டு. மரங்கள் அசைதல் இலை அசைதல் எல்லாவற்றிலும் இடையில் நேரம் உண்டு. அப்படியே வேலை நடுவில் இடம். மனம் நினைத்தாலும்—ஒரு நினைப்புக்கும் இன்னொரு நினைப்புக்கும் இடையில் இடைநிலை உண்டு. ஓய்வு என்றால் அந்த இடைநிலை பெருகிக் கொண்டிருக்கும். நிறைந்த நுகர்வு நிலை அது. சும்மா இருக்கும் சுகம் என்று பெரியோர் வழங்கியது இத்தகைய அரிய பெரிய சிறப்பான நிலையைத்தான்! தியானம் என்பது அதனை எட்ட வேண்டும்.

குழந்தையைக் கட்டி முத்தமிடும்போது கண்ணை மூடிக் கொள்ளுகிறோம். குழந்தையின் சுகம்....... அதைப் பார்ப்பதில்லை தன்னைப் பற்றியும் நினைப்பதில்லை. செய்வகை மறந்த இன்பத்தில் இருக்கிறோம். அனுபவம் என்னால் இப்படி உணர்விறந்ததோர் உணர்வு! இன்ன உணர்வு என்று குறித்துக்கூற இயலாதது.

இருந்ததனை இருந்தபடி இருந்து காட்டிய நிலை தட்சிணாமூர்த்தி நிலை. ஆலயத்தில் அப்படியிருந்து வழிபட வேண்டிய இடத்தில் விரைவாகச் சென்றுவிடுதல் மக்களுக்குப் பழக்கமாகி விட்டது. (அப்போது மதுரைத் திருஞான சம்பந்தர் ஆதீன இளவரசு திருவருள் தவயோக சோம சுந்தர தேசிக ரவர்களும், திருமுருக கிருபானந்த வாரியார், வீரசிவம் முதலியவர்களும் அங்கே எழுந்தருளினர்) ஆலய வழிபாட்டில் தட்சிணாமூர்த்தி சந்நிதியில் இருந்து வழிபடுதல் சிறப்புடையது.

இடைப்பட்ட ஓய்வை அதிகப் படுத்தும் நிலை அனுபவத்தால் வருதல் இப்படியிருந்து வழிபடும் வழிபாட்டு நிலையில் தான்!

சுகம், எல்லாம் மறந்த நிலையில் தோற்றுவது. அதுதான் கற்பனை கடந்த சோதி. அந்தச் சுகவடிவு—உணர்வு நமக்கு உலகத்தில் பற்பல வடிவமாக வருதலும் காணப்படும். குழந்தையாய்' பழமாய், இங்கே எழுந்தருளியிருக்கும் அடிகளாய்ச் சுக வடிவு வருதலும் நேரும். (குருகுலத்தில், திருக்குறளின் முதல் அதிகாரப் பகுதியை எற்றுச் செய்கை செய்தவரும் புண்ணியத் திரு படைத்த திருவாளர் வேதாசல செட்டியார் அவர்கள், ஆசிரியர்க்கு வழிபாட்டிற்குப் பயன்படும்படி ஒரு வெள்ளிக் கமண்டலம் அக்கோத்தில் அன்பின் பரிசாய் அடிகளார் வாயிலாக வழங்குவித்தார்கள்) இடையில் வாரியார் அவர்கள் இப்படி வெள்ளிப் பாத்திரமாய் என்றார்கள் (சிரிப்பு) ஆசிரியர் தொடர்ந்து இப்படிச் சொன்னவர்களாய்ச் சுகவடிவு வருதலுங் காண்க என்றார்கள். (மேலும் சிரிப்பு) கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாதல் என்பது இங்ஙன மெல்லாம்' ஆண், பெண், அழகிய பாம்பு கூட கருணையே உருவமாகி வருதலை ஒக்கும்.

அப்படி வருவதை உற்றுக் கவனித்தால் அதில் உருவம் வேறு என்றும் கோலம் வேறு என்றும் தோற்றும் இங்கே வீற்றிருக்கும் சுவாமிகளுக்கு இதற்கு முன்நிலை வேறு; பட்டம் ஏற்றபின் அதே உருவத்தில் கோலம் வேறு. முன் உருவத்தில் இத்தவக் கோலம் சிறக்கிறது. இது அற்புதக் கோலம். உள்ளுணர்வின் வெளிப்பாடு கோலம். அது வீடின் அருள் வெளியிற் சிறப்பு நிகழ்கின்றது.

அருள்வெளி, திருச்சிற்றம்பலம்! அந்த அம்பலம் வேத முடிக்கு, கற்பனைக்கு, கல்விக்கு அப்பாற் பட்டது. அது ஞான வெளி! ஞானம் என்பது அழுக்கு கலவாத தூய பண்புணர்வு! சித்பர வியோமம்' அந்த மேல் உணர்வு வெளியில் மக்கள் இருக்கப் பழகிக் கொள்வது சிறப்பு! தியானம் அந்நிலையில் இருப்பதாகும்.

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

# விழா நிகழ்ச்சியின் விளக்கம்

(முன் தொடர்ச்சி)

## வாரியார் விரிவுரை

இசைமழை முடிந்ததும் மீண்டும் பெரு மழை பிடித்துக் கொண்டது என்றாலும் அன்பர்கள் ஆர்வத்தை ஒட்டித் திருமுருக. கிருபானந்த வாரியார் அவர்களின் தனி விரிவுரை திருக்கோயிலுக்குள் இறைவன் திருமுன்னிலையிலேயே ஏற்பாடு செய்யப் பெற்று இரவு $10\frac{1}{2}$ மணி முதல் $1\frac{1}{2}$ மணி வரை நடைபெற்றது. மதுரை அடிகளாரும் தம் நெடிய பயண அலுப்பையும் பாராது விரிவுரைக் கூட்டத்துக்குத் தாமே முன் வந்து தலைமை தாங்கிச் சிறப்பித்தார்கள்.

## தனியே நடைபெற்ற சிறப்பு நிகழ்ச்சிகள்

'சிரித்தும், களித்தும், தேனித்தும் சிறந்து வந்த அடியவர்கள் மூன்றாம் நாள் 3-7.54 சனியன்று காலை 10 மணிக்குத் தம் கடன்களை முடித்துக்கொண்டு, வண்ணையம்பதி திரு. சம்பந்த முதலியார் (ஆனந்த விகடன் பைண்டர் தலைவர்) அவர்கள் செய்திருந்த தனி ஏற்பாட்டின்படித் திருக்கோயில் ஆறுமுகப் பெம்மானுக்கு நடைபெற்ற திருமுழுக்கு, திருவலங்காரங்களையும், திருப்புகழ் சதுரர். சே. த. இராமலிங்கம் பிள்ளை அவர்களின் விரிவுரையையும் கண்டு கேட்டு மகிழ்ந்து 'திரண்டு திரண்டு திருவார்த்தை விரிக்கவும் கேட்கவும்' அடிவாரத்தில் ஏற்பாடு செய்யப் பெற்றிருந்த திருமுறைப் பேரவையிற் கூடியிருந்தனர்.

## திருமுறைப் பேரவை

விழாத் தலைவராகிய சிவத்திரு. சோமசுந்தரதேசிக பரமாசாரிய சுவாமிகள் பரிவாரத்தோடும்—அன்பர்களின் பாராயணத்தோடும் வந்து பேரவையின் தலைமையை ஏற்றார்கள்.

கருத்தமைந்த ஆசிரியரின் அரிய முன்னுரையும், 'கல்கி' ஆசிரியரின் கண்ணியமான தொடக்கவுரையும் நிகழ்ந்தன. சைவத் திருவாளர் பூ சமரபுரி முதலியார் அவர்கள் 'பெரிய புராணமும் சைவமும்' என்னும் தம் சொற்பொழிவை அருமையாக நிகழ்த்தினார்கள். விளம்பரத்தில் குறிப்பிட்டபடி பேசுதற்குத் திரு, **M E.** சரசுவதி அம்மையார் **B A.**, அவர்கள் உடல் நலக் குறைவினால் வாராமற் போகவே தலைவர் அவர்களின் ஆணைப்படி வாரியார் அவர்கள் 'வினைத் தாக்குதல் உண்டு' என்னும் உண்மையைத் தக்க மேற்கோள்களுடன் 'மெய்யறிவு' என்னும் பொருள் பற்றி விளக்கினார்கள். நேரம் போவது தெரியாமல் மணி 2க்கு முற்பகல் கூட்டம் முடிந்தது.

## நண்பகல் உணவு

நண்பகல் உணவு ஆயிரக் கணக்கானவர்கட்கு வழக்கம் போல நம் வள்ளியம்மையார் அவர்களால் இரத்தினச் செட்டியார் சத்திரத்திலும், மேற்குறிப்பிட்ட வண்ணையம்பதி சம்பந்த முதலியார் அவர்களால் 63 வர் சத்திரத்திலும் வழங்கப் பெற்றது. அதோடு கானக்கோயிற் பேட்டைப் பெருமக்கள் ஒன்றுபட்டு அன்று பகல் வேளையில் செங்குந்தர் சத்திரத்தில் தனியே நூற்றுக்கு மேற்பட்ட தக்க அன்பர்களைத் திருக்கூட்டத்தார் வழி அழைத்து அறுசுவை உண்டி வழங்கி அகமகிழ்ந்தார்கள்.

## பிற்பகல் பேரவை

மீண்டும் மாலை 5 மணிக்கு அடிகள் தலைமையில் பேரவை தொடங்கியது. குறிப்பிட்டிருந்தபடி, கீ னூர் சன்மார்க்க சங்க அமைப்பாளர் திரு. அ குப்புசாமி அவர்கள் 'மணிவாசகரும், வள்ளலாரும்' என்னும் தலைப்பில் மிக உருக்கமாய்ப் பேசினார்கள். புலவர் திரு முருகவேள் **B O. L**, அவர்கள் 'மாணிக்கவாசகர் புலமைமாட்சி' என்னும் தம் அரிய சொற்பொழிவை நிலைமையை ஒட்டி மிகச் சுருங்கிய நேரத்தில் தகுதியான கருத்துகளைத் தொகுத்துப் பிழிந்து பேசினார்கள் அன்பர்கள் விரும்பியபடி தலைவரவர்கள் ஆணையிட அவர்களுடன் போந்த திரு, வீரசிவ சுப்பிரமணியம் அவர்கள் சமய உணர்ச்சியின் இன்றியமையாமையைப் பற்றி விரிவுரை நிகழ்த்தினார்கள். இடையில், மாம்பாக்கம் குருகுலப் பாடலை அன்பர், திரு. பார்த்தசாரதி இனிமையாகப் பாடிப் பரவசப் படுத்தினார். தலைவர் அவர்கள் அருள் கனிந்த முடிவுரையாற்றி எல்லாருக்கும் திருநீறளித்துப் பேரவையை இரவு $9\frac{1}{2}$ மணிக்கு முடித்தார்கள்.

## விநாயக முதலியார் திருநெறித் தமிழிசையரங்கு

சிறிது நேரம் இடைவேளைக்குப் பின் இரவு 11 மணிக்கு மீண்டும் அதே இடத்தில் திருநெறித் தமிழிசை வேந்தர் புதுவை ஆ. விநாயக முதலியார் அவர்களின் திருநெறித் தமி

ழிசையரங்கு தொடங்கி இரவு 1 மணிவரை இன்ப வெள்ளமாகப் பிறங்கி ஆசிரியரின் வாழ்த்துரையோடு முடிந்தது.

### திருமுறைப் பெருவிழா

நான்காம் நாள் 4-7-54 ஞாயிற்றுக் கிழமையே ஆளுடை அடிகளாகிய மணிமொழியாரின் ஆனிமகத் திருநாள்! அன்று காலை 7 மணிக்கெல்லாம் சிறப்பாக அலங்கரிக்கப் பெற்ற மலரம்பாரியில் திருமுறைகளை வைத்து யானைமேல் ஏற்றி வழக்கம்போல் நால்வர் பெருமக்களின் திருவுருவங்களை அழகிய விமானத்தில் எழுந்தருளச் செய்து, அணி அணியாகப் பலவூர்த் தேவார சபையினரும், பிற அருள்நெறி அமைப்பினரும் பின் தொடர்ந்து உய்வைத் தரும் தெய்வச் செந்தமிழ்த் திருமுறைப் பாடல்களைத் தத்தமக்கேற்ற வகைகளில் இசைக் கருவிகளோடும், தனித்தும், பாராயண முறையில் கூட்டாகவும், மகிழ்ச்சியோடும், உருக்கமாகவும் பாடிக்கொண்டுவரத் தாழக்கோயிலிலிருந்து உயர்திரு ஏ. கசபதி நாயகர் B.A, B.L, M.L.C., அவர்கள் தலைமையில் வலமாகப் புறப்பட்டு வடவாயிலின் வழி அடிவாரத்தை அடைந்து மலை வலமாகத் திருமுறைத் திருவுலா தொடங்கப் பெற்றது. பாடிக்கொண்டு வரும் திருக்கூட்டத்தார் அனைவருக்கும் சந்தனம் பூசி மலர் மாலையிட்டு மரியாதை செய்யப் பெற்றிருந்தது.

### கண்கொளாக் காட்சி

சற்றேறக்குறைய இரண்டு கல் தொலைவு நீளத்தில் ஆண்களும் பெண்களும் தனித்தனியாக அணி வகுத்துக்கொண்டு பாடிக்கொண்டுவர, அவ்வணிவகுப்புக்களுக்கு முன் செல்லும் யானையின் மீது அம்பாரியில் திருமுறைகளும், அவற்றுக்குப் பின் அவற்றை அருளிய நால்வர் பெருமக்களும் பெருமிதமாகச் செல்ல, ஆயிரமாயிரம் பொது மக்கள் பக்கங்களில் நின்று அங்கங்கே அடியார் கூட்டங்களை நிறுத்தி வீழ்ந்து வணங்கியும், பாடக் கேட்டு உருகியும், பரிவோடு நீர், சோடா, பானகம் முதலியன வழங்கியும் வந்த கண்கொள்ளாத் திருக்காட்சியைக் காண 'நாலாயிரங் கண் படைத்திலனே அந்த நான்முகனே' என்றுதான் நல்லன்பர்கள் ஏங்க நேர்ந்தது.

எத்தகையோரையும் 'ஈர்த்து ஈர்த்து என்புருக்கி' இருளகற்றி அருள் புகட்டும் இத் திருவுலாத் திருக்கூட்டங்கள் ஒன்றன் பின் ஒன்றாக மருந்துமலைச் சாரலை அடைந்து அமர்ந்து இளைப்பாற காலைமணி 11 க்கு மேல் ஆய்விட்டது.

### திருவடித் திருவிடச் சிறப்பு

ஆளுடைய அடிகள் தமது ஞானாசிரியரிடம் பெற்ற திருவடிகளைக் காணாத் திருக்காட்சி கண்டு தம் திருமுடியிலிருந்து இறக்கி வைத்துச் சென்ற இடமே மருந்துமலைச் சாரலாகும். அவ்விடத்தின் அருமை பெருமைகளை, தனிமை இனிமைகளை எவ்வாறு விரிப்பது!........... உடல் வளர்ச்சிக்கும் உயிர் வளர்ச்சிக்கும் ஒருங்கே துணை செய்யும் உயர்வுடைய அவ்விடத்துக் காற்றும், உணர்வும் கழிபெருஞ் சிறப்பின. உணர்ந்து பயன் பெறுவோர்க்கே அவற்றின் உண்மையும் சிறப்பும் புலனாகும்.

### ஏரிப்பேட்டையர் அன்பு

ஏரிப்பேட்டை என்றும் தேசுமுகிப்பேட்டை என்றும் சொல்லப் பெறும் 'திருவடிப் பேட்டை' எதிர் வரிசையில் சிறிய அளவில் இருக்கிறது. இவ்வாண்டு அவ்விடத்து வாழும் மக்கள் எல்லாரும் ஒன்றுபட்டு அன்போடு பல அரிய திருச்செயல்களை (கைங்கரியங்களை)யும் உதவிகளையும் செய்து ஊக்கங் காட்டினார்கள். சென்ற ஆண்டுகளைவிடப் பெரிய பந்தலை அமைத்து வைத்தும் 400-500 பேருக்குப் பிரசாதம் போட்டு வழங்கியும், திருவடிப் பூசைக்கு வேண்டிய அண்டா, தட்டு, பூசைப் பலகை முதலியவைகளைக் கொடுத்துதவியும், ஒலிப்பெருக்கி அமைப்புக்குத் துணை செய்தும் அவர்கள் திருக்கூட்டத்தாரை மகிழ்வித்தார்கள்.

### திருவடி பூசை

சிறக்க, அன்பர்கள் அனைவரும் ஈடுபட்டுக் கண்டு மகிழவேண்டும் என்று ஆசிரியர் விரும்பியபடி அங்கே நிலையாக உள்ள திருவடிக்கு வழக்கம்போல் திருமுழுக்குச் செய்ததோடு, ஆசிரியர் பூசித்து வரும் எல்லாம் வல்ல முழுமுதற் சிவத்தின் தங்கத் திருவடிக்கும் பலர் காணப் பந்தலின் நடுவில் உயர்ந்த இடத்தில் சிறப்பு முறையில் நிரம்பத் திருமுழுக்குப் பண்டங்களைத் தொகுத்துத் தகுந்த ஓர் ஆதிசைவரை (வழுவத்தூர் பூசை செய்த குருக்களை)க்கொண்டு அமைதியான முறையில் திருமுழுக்குச் செய்விக்கப் பெற்றது. மக்கள் எல்லாரும் அங்கங்கே அமைதியாக இருந்து திருமுழுக்கைக் கண்டு மகிழ்ந்ததோடு, அங்கேயே மேடை அமைத்து அதன்மேல் தக்கவர்களை அமர்த்திச் செய்விக்கப் பெற்ற திரு

முறை இசை நிகழ்ச்சிகளையும் கேட்டு மகிழ்ந்தார்கள்.

### சிறப்பு நிகழ்ச்சிகள்

முதலில் அம் மேடை மீது காஞ்சிபுரத்திலிருந்து நம் திருமுறைப் பெருவிழாவில் கலந்து கொள்வதற்காகவே, திருக்கச்சூர், திருவிடைச்சுரம் முதலிய திருப்பதிகளுக்கும் சென்று திருக்கூட்டமாக வந்திருந்த மெய்கண்டார் கழகத்தினரும், தொண்ட நாட்டுச் சிவதலயாத்திரைச் சபையினரும் வழக்கம் போல் தாம் செய்யும் ஞாயிற்றுக் கிழமை வாரவழிபாட்டைச் சிவஞானபோதம் முதலியவற்றை ஓதிச் செய்தார்கள். தருமபுர ஆதீனத்திலிருந்து வந்திருந்த ஓதுவமார்களும் சிறிது நேரம் அவர்களுடன் சேர்ந்து பாராயணம் செய்தார்கள். அடுத்துக், காஞ்சிபுரம் திரு வி. திருஞான சம்பந்த முதலியார் அவர்கள் சிறிது நேரம் திருக்கழுக்குன்ற விழாப் பெருமைகளையும், திருமுறைச்சிறப்புக்களையும் எடுத்துப் பேசினார்கள். ஆசிரியரவர்கள் திருவடிப் பூசையின் சிறப்புப் பற்றியும், அவ்விடத்து மாட்சிமை பற்றியும் விளக்கினார்கள்.

### திருமுறை இசைஞர்கள்

பிறகு முறையே திரு நெறித் தமிழிசைச் செல்வர் சைதை. திரு. த. நடராசன் அவர்களும் கானக்கோயிற்பேட்டை தேவாரம் திரு. சுந்தரவடிவேல் அவர்களும், தனித் தனியே சிறிது சிறிது நேரம் தக்க பக்கக் கருவிகளுடன் திருமுறைப் பாடல் இசையரங்கை நிகழ்த்தினார்கள்.

பின் திரு, வேதாசலம் செட்டியார் அவர்கள் தலைமையில் சென்னை அருணகிரி நாதர் பக்த ஜன சபையாரின் திருப்புகழ் முதலிய முருகன் அருட் பாடல் பாராயணமும் இனிதாக நிகழ்ந்தது.

### அருளமுது வழங்கும் அன்பர்கள் ஆர்வம்

பிற்பகல் மணி 4 ஆய் விட்டது. அதுவரையில் ஊணையும், ஏன்? தம்மையே மறந்து பலர் திருவடிப் பூசையிலும், திருமுறைப் பாடல் இசையிலும் திளைத்திருந்தனர். ஆனாலும் சிவத்திரு. வள்ளி அம்மையார், அவர்கள் ஆணைப்படி அங்கேயே கொண்டுவந்து ஆயிரக்கணக்கானவர்களுக்கு அருளமுது வழங்கும் அன்பர்கள் "நேரத்தில் அடியார்களுக்கு உணவிட முடியவில்லையே" என்று ஏங்கிக் கொண்டே இருந்து, "எப்போது முடியும் திருவடிப்பூசை?" என்று எதிர்பார்த்து அது ஓரளவு முடிந்ததும், அன்பர்கள் அங்கங்கே இருக்கிற நிலையிலேயே இலைகளைக் கொடுத்து உணவு வழங்கத் தொடங்கி விட்டார்கள்.......எப்படியோ சமாளித்துக் கூடியிருந்த பல்லாயிரம் மக்களுக்கும் தாங்கள் அருமையாகச் சமைத்துக் கொணர்ந்த சுவைமிக்க கதம்ப உணவு, தயிருணவுகளைத் திரளை திரளையாக வழங்கி முடித்தார்கள்.

### மூவர் பேட்டையர் அன்பு

மாலை 5 மணிக்குமேல் மீண்டும் மலைவலம் தொடங்கியது. அன்பர்களின் அணி அணியான பாடற்றிருக்கூட்டங்கள் தொடர்ந்தன. மூவர் பேட்டையிலுள்ள நால்வர் கோயிலை அணுகியதும் அப் பேட்டை அன்பர்கள் திருக்கூட்டத்தார் அனைவரையும் வரிசை வரிசையாக அழைத்துச் சென்று எல்லாருக்கும் சிற்றுண்டியும் சுவைநீரும் வழங்கினார்கள்.

விழாத் தொடக்க நாள் முதல் பேரன்பும் பெருக்கமும் காட்டி மகிழ்வித்து வந்த இப் பேட்டை அன்பர்கள், நால்வர் கோயிலில் நடைபெற வேண்டிய நிகழ்ச்சிகளுக்கான பந்தல் முதலிய ஏற்பாடுகளை இயன்றவரை சிறப்பாகச் செய்து வைத்திருந்தனர்.

### நால்வர் கோயில் நிகழ்ச்சிகள்

அங்கங்கே நால்வர் திருவுருவங்களுக்குத் திருமுழுக்கும், மணிவாசகருக்கு ஊசலும், தேவார பூஷணம் காஞ்சி திரு. சாரங்கபாணி செட்டியார் அவர்களின் இன்னிசைத் திருமுறைப் பாராயணமும் சிறப்பாக நடைபெற்றன. ஊசலின்போது குருகுல மாணவ மாணவிகள் திருவாசகத்திலுள்ள திருப்பொன்னூசல் முதலிய பாடல்களைப் பாடியது குறிப்பிடத்தக்கது.

### விழா முடிவு

திருக்கூட்டச் செயலாளரும், விழாத் தொண்டர் திரு, ஆடலரசு அவர்களும் அளவுக்கு விஞ்சிய உழைப்பின் காரணமாகச் சிறிது உடல் களைப்புற்று விழாவின் முடிவு நிகழ்ச்சிகளாக இங்கே நடைபெற்றவைகளை உடனிருந்து நடத்த இயலாமற் போயிற்று. என்றாலும், அந்நிலையைப் பேட்டைப் பெருமக்களுக்குச் சொல்லி ஆசிரியர் அவர்களே இறுதியில் நன்றி கூறு முகத்தான் அனைவர்க்கும் வாழ்த்துரை வழங்கி இரவு 10 மணிக்கு இனிது முடித்து வைத்தார்கள்.

ஒன்பதாவது ஆண்டுத் திருமுறை இன்னிசைத் திருவிழா இவ்வாறு திருவருளால் முன்னாண்டுகளைவிடப் பன்னலமும் வளர்ச்சியும் பெற்றுப் பாங்குற நிகழ்ந்தது.

வாழ்க திருமுறை!
வெல்க தொண்டர்கள்!!

# விருந்தில் பொருந்த வேண்டிய மருந்துகள்

ஒன்பதாம் ஆண்டுத் திருக்கழுக்குன்றத் திருமுறைப் பெருவிழாவின் சிறப்புக்களையும் வளர்ச்சிகளையும் முன் கட்டுரைகளில் கண்டோம். இனி அவ்விழா அடுத்த அடுத்த ஆண்டுகளில் மேலும் பல சிறப்புக்களையும் பயிற்சிகளையும் அடைவதற்கு அதில் உள்ள சில குறைகளையும் அன்பு முறையில் ஆக்க நோக்கத்தோடு காணவேண்டும். குறைகளைக் களையத்தக்க முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். இது விழாவிற் கருத்துடையவர்களுக்குக் கடமையாகின்றது.

விழா என்னவோ, பல வகையிலும் நம் கண்ணுக்கும் காதுக்கும், கருத்துக்கும் ஏன்? நாவுக்குங் கூடத்தான் பெருவிருந்தாகவே நிகழ்கின்றது. ஆனால், அவ்விருந்தைச் செய்விக்கத் திருக்கூட்டத்தார், குறிப்பாகச் சிவனடியார் திருக்கூட்டச் செயலாளர் திரு. மா. ரா. சம்பந்தம் அவர்கள் எத்துணைப் பெரு முயற்சிகளும் அல்லல்களும் மேற்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குவேண்டிய உதவிகள் என்னென்ன என்று பலரும் முன்வந்து பார்த்து அவர்களால் இயன்ற உதவிகளைச் செய்ய வேண்டுவது கட்டாயமாகும்.

விழா நிகழ்ச்சிகள் பல்வேறு இடங்களில் பல்வேறு சுவை பயக்கின்ற முறையில் நடக்கின்றன. அங்கங்கே அவற்றைப் பொறுப்பாகவும், கருத்தாகவும் இருந்து காலத்தில் செய்விக்கத் தனித் தனிக் குழுவாகத் தொண்டர்கள் பலர் வேலை செய்ய வேண்டியிருக்கிறது. இவ்வளவு பெரிய விழா விரல் விட்டு எண்ணத் தக்க ஒரு சில தொண்டர்களின் உழைப்பினாலேயே நடக்கின்றது என்னும் உண்மையை அறிந்தால், எவரும் வியவாதிரார்; அதோடு அந்நிலையே விழாவில் காணப்படும் காலத்தில் நடவாமை, கூட்டங்களில் சில நேரங்களில் அமைதிக் குறைவு, உணவிடங்களில் ஒழுங்கின்மை, விளம்பரக் குறைவு முதலிய சிறு சிறு குறைகளுக்குக் காரணம் என்பதையும் உணர்ந்து குறை கூறுவதையும் விட்டு முன் வந்து உதவாதிரார்.

விழாவில் உள்ள குறைகளில் பெரியது போதிய விளம்பரம் முன்னும் பின்னும் இராமையே. விளம்பரத்திற்கெனத் தனி முயற்சிகளை ஒரு தனிக்குழு மேற்கொண்டு செய்தல் வேண்டும்.

விழாவின் பல்வேறு பணிகளையும் செய்யச் சாரணர் படை போன்று பயிற்சி பெற்ற ஒரு தனித்தொண்டர் படையும் வேண்டும். திருக்கூட்டத்தார் விழாவுக்கு முன் சென்னையிலுள்ள பல்வேறு சமய அமைப்புகளையும் கூட்டி அவைகளின் பொறுப்பான உதவிகளைப் பெற முயலவேண்டும்.

திருக்கழுக்குன்றத்துக்கும் அவ்வாறே சில கிழமைகளுக்கு முன்னதாகவே வந்து, அவ்வூர்த் தலைவர்களுடனும், சூழ உள்ள பேட்டைப் பெருமக்கள், திருக்கோயில் அதிகாரிகள், ஊராதிகாரிகளுடனும், கடைகண்ணி உணவு விடுதி முதலியன வைத்திருக்கும் வணிகர்களிடமும் கூடத் தொடர்பு கொண்டு, எல்லாருடைய ஆதரவையும் பெற முயற்சி செய்ய வேண்டும்.

விழாவில் அக்கறையுள்ள தொண்டர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்துகொடுத்து அங்கங்கே எல்லா ஏற்பாடுகளையும் பொறுப்பாகவும், முன்னதாகவும், சிறப்பாகவும் கலந்து செய்யும்படி தூண்டவேண்டும்.

தனி ஏற்பாடுகள் எதுவும் இடம்பெறாதபடி தழுவி, எல்லாம் திருக்கூட்டச் சார்பிலேயே நடைபெறும்படி செய்ய வேண்டியதும் கட்டாயமாகும்.

இறுதியாகத் தொடக்க முதல் இத் திருமுறைப் பெருவிழாவின் முதன்மையும் நடைபெறவேண்டும் வகைகளும் தெரிவித்து அதில் சிவனடியார் திருக்கூட்டத்தாரையும் ஏனையோரையும் ஈடுபடுத்தி, நாட்டு மக்களையும் நாளும் ஊக்கி அதில் அக்கறை கொள்ளச் செய்து எல்லா நிகழ்ச்சிகளுக்கும் காரணமாக இருந்துவருபவர்கள் ஆசிரியர் இளவழகனார் அவர்களே ஆவர். ஆதலின் அவர்கள் தம் கடமை ஆர்வத்தால் இன்னும் விழாவை எவ்வளவோ விரிவாகவும் அழகாகவும் பயனுண்டாகவும் செய்ய வேண்டும் என்று விரும்புவது இயற்கையே. 'நம்மால் அவ்வளவுக்குத் தாள முடியுமா'? என்று அச்சப்படக் கூடாது. சில அரிய பெரிய செயல்களை நாட்டுக்காகச் செய்தே தீரவேண்டும். இதற்கேற்ற வீரராய், அருணெறித் தொண்டர்கள் திகழ வேண்டும். ஆசிரியர் கருத்தின்வழி எல்லா ஏற்பாடுகளையும் முயன்று செய்து மகிழ்வது அவரவர்க்கும் நாட்டுக்கும் நலமே தரும்.

வடதிருச்சிற்றம்பலத்திலிருந்து திருமுறைகளும் திருமுறை ஆசிரியர்களும் பற்பல [illegible]ங்களோடு உலாவந்து திருக்

கழுக்குன்றம் சேர்வது நூற்றுக் கணக்கான கிராமங்களுக்குப் பேர் எழுச்சியையும் உணர்ச்சியையும் உண்டாக்கும்; தொண்டுகள் நாட்டில் நன்கு பரவும். இந்த ஆண்டில் இக்கிராமப் பக்கங்களில் முதன்மையானவர்களுக்குக்கூட விளம்பரமே செய்யப்படவில்லை.

சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம் இதனில் முதன்மையாகக் கருத்திருத்தாமற் போனால் இப் பெருவிழாவின் பயன் பரவுதலுறாது.

மொத்தத்தில் ஏற்பாடுகளை மிகவும் முன் கூட்டியே பலரையுந் தழுவிக் கொண்டு செய்ய வேண்டியதும், ஆசிரியர் குறிப்புக்களைத் தழுவி ஏற்பாடுகளை வழுவாமற் செய்ய வேண்டியதும், முன்னும் பின்னும் விளம்பரங்களைத் தக்கபடி செய்ய வேண்டியதும் முதன்மையெனலாம். நுணுக்கமாக எண்ணிப் பார்த்தால் எவ்வளவோ வழிவகைகளும் பிறவுந் தோன்றும். திருவருளடிப்படையில் செய்கின்ற ஒன்றைச் சிறப்பாகச் செய்ய முன்வந்து ஆர்வமாய் முயன்றால் திருவருள் எளிவந்து துணை செய்யும்.

விளங்குக விழா!
வெல்க தொண்டு!!

Telegrams: "RAMBROS"

**N.Ramu Bros,**

GENERAL HARDWARE MERCHANTS

AVANASHI ROAD,
COIMBATORE.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தியான உணர்வுடையோர்க்கு யாரைப் பார்த்தாலும் அருள் வெளித் தோற்றமே தோற்றும் குழந்தைக்குத் தாயாரின் சதையும், இரத்தமும் சேர்ந்தால் உடல் தோற்றாது. தாய்மை வடிவே தோற்றும் அதாவது தாய்மையின் உணர்வுக் கோலமே, அவ்வுணர்வின் நடனமே தோற்றும். மற்றவர் பார்வைக்குத் தூல உடல் தெரிகிறது; குழந்தையின் பார்வைக்கு அவ்வுடலைக் கடந்த ஒரு நுண்ணிய உணர்வு வெளி தெரிகிறது. தாய்க்கும் அவ்வாறுதான்! 'மரத்தை மறைத்தது மாமத யானை' என்பதைத் திருமூலரும் நினைவூட்டினார். மரத்தை நினைவு வந்த விடத்து யானை இல்லை. யானையை நினைவாயிருக்கும் போது மரம் தோன்றவில்லை.

உலகத்தை மண் முதலான பூதவடிவாக நினைக்கின்ற நேரத்தில் அதனை இயக்கும் அருட்கோல இயக்கம் தெரிவதில்லை. அவ்வருட்கோல இயக்க நினைவாய் அதீத அன்புணர்வில் இருக்கும்போது உலகம் பூதவடிவாகத் தோன்றுவதில்லை. அதனாலேதான் "ஏதவத்தைப் பட்டாலும் முத்தர் மனமிருக்கும் மோனத்தே" என்றனர் பெரியோர்.

நம்மை வெறும் மனிதர்களாக எண்ணாமல் எல்லாவற்றின் உள்ளும் இருந்து எது இப்படிச் செய்கிறதோ அதை நினைந்து அன்புருக்கங் கொண்டால் ஆண்டவன் வடிவமாகவே யாவருந் தோன்றுவர்; யாதுந் தோற்றும். அந்த அத்வைதப் பண்பு வர வேண்டும்.

மலை மோனம் தருவது எதைப் பார்த்தாலும் ஒரே பரவெளி மோனம்! இவ்வரிய பெரிய நிலை தியான நிலை. யாரையும் எதனையும் இப்படிப் பரமாய்ப் பார்க்கிறதுதான் யோகம்! இது நான் 'மெய்நிலை' அதாவது நிலைக்கும் செய்கை; உள்ளீடு அமைந்தது; அதாவது தெய்வ உள்ளீடு அமைந்தது; புரை இல்லாதது. வேறு மாதிரியானவை அழியும். அப்படி நிலைத்தல் இல்லாமல் தீமை தருவதையே பொய் என்றனர் பெரியோர். நமக்குப் பொய்யான போக வாழ்க்கை எதற்கு? மெய்யான யோக வாழ்க்கையே வேண்டும்.

பொய் வேறு, புளுகு வேறு. பொய் என்பது நிலையாமையும் தீமையும் உடையது. புளுகு என்பது, இருப்பதொன்றை இல்லை என்றும், இல்லாததொன்றை இருப்பது என்றும் சொல்லுவது. அருள் அடிப்படையை நினைத்தால் எல்லாம் மெய் ஆகும். மேற்பொருளை நினைத்தால் எல்லாம் பொய்யாகும். ஆனால் இவற்றில் எதிலும் புளுகு இல்லை.

அமர்ந்து பார்க்குமிடமெங்கும் பராபரமேயாதலின் அந்த உணர்வோடு கொஞ்ச நேரம் தியானத்தில் திளைத்திருப்போமாக! பேதமில்லா நிலையிலே எல்லாம் பரமாய்ப் பார்த்து அதாவது, கற்பனை கடந்த சோதி என்பது கருணையே உருவமாகி அற்புதக் கோலம் நீடி அம்பலத்துள் நிகழ்த்தும் பொற்புறு நடனமாய்ப் பார்த்து, நாம் பார்க்கிறோம் என்னும் நினைவையும் மறந்து, நான் என்பது கெட்டுப் போர இயற்கையில் திளைப்போமாக!

'மூர்த்தி'

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர், தி. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம் மாம்பாக்கம், மதுராந்தகம். (அஞ்)